இந்த நலக்குழு அந்த வேலைகளை மேற்கொள்ளும். சமுதாய சேவை இல்லங்களும் இந்தக் காரியங்களில் ஈடுபடும்படி கேட்டுக் கொள்கிறோம். விரைவில் தொடர்பு கொண்டு பணி நடைபெறும்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, இந்த நலப் பொறுப்புக் கழகத்தின் பணி சென்னை மாநகரத்திலுள்ள குடிசைப் பகுதிகளுக்கு மட்டும்தானா நடக்கிறது அல்லது தமிழகம் பூராவிலும் உள்ள குடிசைப் பகுதிகளில் இப்படிப்பட்ட பணி நடைபெறுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சென்னை மாநகரத்தில் மட்டும்தான் இந்த நலப் பொறுப்புக் கழகம் காரியங்களை மேற் கொண்டிருக்கிறது.

Childrens' Day Care Centres

* 713 *Q*.—THIRU N. DENNIS:
THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether a number of Day Care Centres for the benefit of the Children of working Mothers have been opened in Slum Clearance Board areas in Madras; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) குழந்தைகள் பாதுகாப்பு நிலையங்களை (Day Care Centres) நடத்த தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் இலவசமாக இடவசதி அளித்துள்ளது; சென்னை மாநகரிலுள்ள குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புப் பகுதிகளைச் சேர்ந்த குழந்தைகளின் நன்மைக்காக இந்த நிலையங்கள் நடத்தப் படுகின்றன. ஏனைய செலவினங்களை மாநில அரசு ஏற்றுக் கொள்கிறது. சமூக நலத் துறையின் நேரடி மேற்பார்வையில் இந்த நிலையங்கள் நடத்தப்படுகின்றன.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, எல்லா ஸ்லம் க்ளியரன்ஸ் இடங்களுக்கும் இந்த வசதி இருக்கிறதா? பிரைவேட் ஏஜென்சியும் ஃபைனான்ஸ் அசிஸ்டென்சும் ஏதாவது உண்டா? . . இதற்கு ஏதாவது கட்டணம் வசூலிக்கப்படுகிறதா? 'ஆயாக்கள்

1974 ஏப்ரல் 2]

நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால் அவர்களுக்குப் பதிலாகப் பயிற்சிபெற்ற ஆசிரியர்களை நியமித்தால் நன்றாக இருக்கும். ஆதலால் அதற்கு அரசு வழிவகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னதுபோல் இந்த சேவைக் கழகம் நம்மிடத்தில் எந்தவிதமான உதவியும் பெறுவது இல்லை. ஆனால் அங்கேயுள்ள குழந்தைகள் காப்பகத்தைப் பாதுகாக்கவும், குழந்தைகளைப் பேணிக் காக்கவும் 100 ரூபாய் சம்பளத்திலே ஒரு ஆசிரியை நியமிக்கப்பட்டிருக்கிறார் சமூக நலத் துறையின் மூலமாக. அதேபோல் இரண்டு ஆயாக்களை நியமிக்கிறது. குழந்தைகளின் ஊட்டச் சத்துக்காக நாள் ஒன்றுக்கு 20 காசு சமூக நலத் துறை செலவு செய்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, சென்னையில் தற்போது குழந்தைகள் பாதுகாப்பு நிலையங்கள் எத்தனை இருக்கின்றன? இதை வெளி மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, தற்போது சென்னை மாநகரத்தில் மட்டும் 19 பகுதிகளில் இப்படிப்பட்ட குழந்தைகள் காப்பகங்கள் இருக்கின்றன. இன்னும் இரண்டு பகுதிகளிலே தொடங்குவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, 21 இடங்களில் இப்படிப்பட்ட வேலைகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

திரு. எம். சுரேந்திரன்: சார், குழைந்தைகள் பாதுகாப்பு நிலையங்கள் என்றால் அந்த தாய்-தந்தையர் வேலைக்குப் போகும் பொழுது பாதுகாக்கப்படுவது என்று பொருளா? அல்லது வீடுகளில் உள்ள குழந்தைகளுக்குச் சத்துணவு, ஆரோக்கியமான வசதி முதலியவைகளை ஆராய்ந்து ஏற்பாடு செய்வது என்று பொருளா? என்பதையும் இங்கே உள்ளதைப்போல் ஸ்லம் க்ளியரான்ஸ் பல வீடுகளைக் கட்டுகின்ற மற்றப் பகுதிகளிலும் இது போன்ற காரியங்களைச் செய்ய ஏதாவது உத்தேசம் உண்டா என்பதையும் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, ஒவ்வொரு காப்பகத்திலும் 60 குழந்தைகளை நாங்கள் தேர்ந்தெடுக்கிறோம். வேலை பார்க்கும் தாய்மார்களின் வீட்டுக் குழந்தைகளைப் பாதுகாப்பதற்குப் பயன்படுகிறது. வேலைவாய்ப்பு எதுவுமே இல்லாமல் வறுமையிலே அடிபட்டுக்கொண்டிருக்கின்ற குழந்தைகளைப் பேணிக் காக்க, அந்தக் குழந்தைகளைக் காப்பாற்றவும், ஊட்டசத்து இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கும் பயன்படுகிறது. தாயற்ற குழந்தைகளுக்கு முதலிடம் அளிக்கப்படுகிறது. இந்த வகையில் காரியங்கள் நடைபெறுவதற்கு மாவட்ட அளவில் காரியங்களை நடத்தலாம் என்ற எண்ணமும் அரசுக்கு இருக்கிறது.

Shops in Slum Clearance tenaments

* 714 *Q.*—THIRU G. R. EDMUND: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the shopping structures built by the Slum Clearance Board under the Remunerative Scheme at the Marina. opposite the All-India Radio have been leased out to private parties; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) ஆல் இந்தியா ரேடியோ எதிரில், நொச்சிக்குப்பத்தில் குடிசை மாற்று வாரியத்தின் ஆதாயம் தரும் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள சிறு கடைகளின் குத்தகை உரிமை 15—2—1974 அன்று ஏலத்தில் விடப்பட்டது. நான்கு தனிப்பட்ட நபர்கள் 1—3—1974 முதல் ஒரு வருட காலத்திற்குக் குத்தகை எடுத்துள்ளனர்.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, அதிலே மொத்தம் எத்தனை கடைகள் இருக்கின்றன? நான்கு பேர்களின் கடைகளும் ஒரே கடையா அல்லது தனித் தனியான கடைகளா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, நான்கு பேர்களும் தனித் தனியாக. அதிலே ஒரு கடிகாரக் கடை, ஒரு பொது விற்பனை நிலையம், ஒரு குளிர் பானங்கள்-அலங்கார பொருட்கள் விற்பனை இடம், ஒரு சிற்றுண்டி விடுதி என்று ஏலத்தில் எடுக்கப்பட்டிருக்கிறது.